**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.487/2024**
**Prosecution Witnesses: 9**

| | | | |
|---|---|---|---|
| Name | : சங்கர் | Caste | : |
| Father Name/ Husband Name | : பால்ராஜ் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(18.11.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது அருப்புக்கோட்டை தாலுகா காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2024ம் வருடம் விருதுநகர் மாவட்டம் சாத்தூர் உட்கோட்டம் வெம்பக்கோட்டை காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். 09.08.2024 அன்று காலை 8 மணியளவில் நான் குற்றதடுப்பு சம்பந்தாக போலிசார் சகிதம் கீழக்காயில்பட்டி விலக்கு அருகே வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது TN 95 H 7156 என்ற யமஹா இருசக்கர வாகனத்தில் வந்த இருவர் எங்களை பார்த்தவுடன் மேற்படி வாகனத்தை நிறுத்திவிட்டு தப்பியோட முயன்றபோது போலிசார் உதவியுடன் அவர்களை மடக்கி பிடித்துவிசாரித்த போது இருசக்கர வாகனத்தை வந்தவர் செல்வகுமார் வயது 20/24 த/பெ.வைரமுத்து என்பவர் பின்னால் அமர்ந்து வந்தவர் செல்வகுமார் வயது 19/24 த/பெ.பிரபாகரன் அவர் இராமநாதபுரத்தை சார்ந்தவர் என்று தெரிய வ ந்த நிலையில் மேற்படி இருநபர்களும் வெம்பக்கோட்டை காவல் நிலைய குற்ற எண்.195/24 ச/பி. (309)4) BNS r/w 3(5) என்ற வழக்கில் சம்பந்தப்பட் எதிரிகள் என தெரியவந்த நிலையில்

2 எதிரிகளையும் காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் கோவிந்தராஜ் மற்றும் பார்த்த சாரதி ஆகியோர்கள் முன்பு விசாரித்த போது 2 வது எதிரி செல்வகுமார் த/பெ.பிரபாகரன் என்பவர் எவ்வித அச்சுறுத்தலோ துன்புறுத்தலும் இன்றி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்கண்ட சாட்சிகளின் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்பு அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அதே நாள் மதியம் 12.50 மணிக்கு சிவகாசி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லுரிக்கு பின்புறம் உள்ள மோட்டார் ரூமில் வைத்து 2 வது எதிரி செல்வகுமார் த/பெ.பிரபாகரன் ஆஜர் செய்த இந்த வழக்கு சொத்தான TN 58 BZ 9321 என்ற இருசக்கர வாகனத்தை மேற்கண்ட சாட்சிகளின் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு 1 வது எதிரி செல்வகுமார் த/பெ.வைரமுத்து என்பவரையும் மேற்கண்ட சாட்சிகளின் முன்பு விசாரித்த போது அவர் எவ்வித அச்சுறுத்தலோ துன்புறுத்தலும் இன்றி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பின்பு அத்தாட்சியில் கைப்பற்றிய வழக்கு சொத்தினை படிவம் 91 ன் மூலம் இந்நீதிமன்றத்தில் சமர்பித்தேன். படிவம் 91 அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரியை நான் கைது செய்த போது நான் உற்பத்தி செய்த கைது குறிப்பாணையின் நகல் எதுவும் திருமங்கலம் தாலுகா காவல் நிலைய குற்ற எண்.150/2024 ல் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். ஆனால் அதை ஆவணமாக கொடுக்கவில்லை. சுமார் 1 –1/2 மணி நேரம் கழித்து தான் கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற ஆரம்பித்தேனா என்றால் முதல் எதிரியை 8.45 மணிக்கு கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்க ஆரம்பித்தேன். 1 மற்றும் 2ம் எதிரிகளை 8.30 மணிக்கே கைது செய்தேன். 2 ஒப்புதல் வாக்குமூலங்களையும் மற்றொரு ஒப்புதல் வாக்குமூலத்தில் விபரங்களை சொல்லவில்லை என்றால் சரிதான். அப்போது 4 வாகனங்களையும் ஒரே நேரத்தில் தான் கைப்பற்றினேனா என்றால் சரியல்ல. ஆனால் வெவ்வேறு

அத்தாட்சியில் பதிவு செய்தேன். ஆனால் வெவ்வேறு நேரத்தில் கைப்பற்றியதாக அத்தாட்சியை தயார் செய்தேன். அப்படி செய்யும் போது ஒரே அத்தாட்சியை கைப்பற்ற வேண்டும். ஆனால் நான் தனித்தனியாக அத்தாட்சி தயார் செய்ததற்கு காரணம் நான் சொன்ன மாதிரி சொன்ன இடத்தில் அனைத்து வாகனங்களையும் நான் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய சரகத்திற்கு உட்பட்ட பகுதியில் தான் நான் வாகனங்களை கைப்பற்றியதால் அந்த வரையறைக்கு உட்பட்ட நீதிமன்றத்தில் தான் வாகனங்களை ஒப்படைத்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சிகள் இருவரும் நான் சொன்னது போல் ஒப்புதல் வாக்குமூலமும் அத்தாட்சியும் தயார் செய்யும் போது அவர்கள் உடன் இருக்கவில்லை என்று சொன்னாலும் நானாகவே அவர்களது வாக்குமூலத்தை தயார் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன போல் சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் எதிரிகளை கைது செய்யவும் இல்லை. ஒப்புதல் மற்றும் அத்தாட்சிகளை தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.